# அருள்சந்-கவிதைகள்-1



## முன்னுரை

ஏற்றத்தாழ்வு அடிமைத்தனம்
சுதந்திரம் சமத்துவம்..
ஒன்றிற்கு இவை தெரியாதது.!
அந்த ஒன்றைத்தேடி
ஓராயிரம் ஞானங்கள்.
ஒன்று இரண்டாகி
பல்கிப்பெருகியதால்
பொருளும் உயிரும் இப்பூவுலகில்.

ஒன்று இரண்டானதால்..
கணவனுக்கு மனைவி சாரம்.
மூன்றானதால்..
தந்தைக்கு மகன் சாரம்.
பல்கிப்பெருகியதால்..
பேரினத்திற்கு பல இனங்கள் சாரம்.
பேரரசிற்கு மதங்கள் சாரம்.
மதத்திற்கோ மக்கள் பிரிவு சாரம்.
வருணத்திற்கு சாதிகள் சாரம்.
சாரத்தின் துன்பமே தாழ்வும் அடிமைத்தனமும்.
சாரத்தின் இன்பமா சுதந்திரமும் சமத்துவமும்.?
துன்பத்தில் மனித இனம்..
இன்பத்தின் சாரம் எதுவென்பதை தேடுதற்கே
என் எண்ணங்களும் எழுத்துக்களும்..



அன்புடன்,

-அருள்சந்,திருச்சி-25
26-01-2020



# அம்மா பசிக்குதா.?



மண் தோன்றிய காலம் அது.
விதைத்து அறுத்த கைகள்..
இன்னைக்கும் ஓய்ந்தபாடில்லை..
பெண்..உலகின் வேளான் விஞ்ஞானி.!
தன்பசி மறந்து என்பசி தீர்ப்பாள்.
கூடவே தம்பிக்கு பாலூட்டுவாள்.
அம்மா பசிக்குதா.?
ஒரு வாய் கஞ்சி உனக்கு ஊத்திட தீராத ஆசை..
ஆனால் யாரோ ஓர் தாய் பெற்ற பெண்ணொருத்தி
என் தம்பிக்குத்தாரமாகி
உன்பசி தீர்க்கின்றாள்..
நானும் ஒருவனுக்கு வாழ்க்கைப்பட்டு
அத்தாய் பசித்தீர்க்கிறேன்.
எடுப்பதும் கொடுப்பதும்
பெண்ணிற்கு மட்டும் விதித்த தர்மமோ.?
இது ஆணிற்கு சில காலம்
எப்பொழுதாவது வருமோ.!
அம்மா பசிக்குதா..!
மண் தோன்றிய காலம் முதல்
பெண்..தன் தாய் பசித்தீர்க்கவே இல்லை.!







-அருள்சந்.
14-04-2018

# பாட்டிக்கொடுத்தாள் முத்தம்.

கற்பாறை மீது எச்சில்
என் பாட்டித்துப்பியது.
ஆறு அணா..
என் உள்ளங்கையில்
கறிவாங்கிடப்பாட்டி தந்தது.
எனக்கதில் அரையணா
கடலை வாங்கித்தின்ன.
மூன்று மலை ஏறியிறங்கி
வெள்ளைக்காரனுக்கான
மார்க்கெட் கடையிலிருந்து
ஒருபவுண்டு மாட்டுக்கறி வாங்கி
எச்சில் காய்வதற்குள்
பாட்டிக்கைக்கு மாறனும்.

காட்டுப்பாதையில்
மகரந்தக்காற்று..
தேனீக்களின் ரீங்காரம்..
சலசலக்கும் சோலைகள்..
சங்கீதப்பறவைகள்..
நீரோடைகளில் நறுமலர்கள்..
நரிகளின் ஊளையில்
படபடக்கும் கோழிகள்..
ஓட்டம் மட்டும்.. நடையில்லை.
கறி என் தோள் பையில்
கடலையை மென்றபடி
மூச்சுவாங்கா ஓட்டம்.
கற்பாறை மீது காயாத எச்சில்..
பாட்டிக்கொடுத்தாள் முத்தம்

முகத்தில் கரிபூசும் காற்று..
ஆறு மாமங்கம் ஆறு அயனம்
ரெண்டும்கெட்டான் காலச்சுருள்..
வயது எழுபத்தி ஐந்து.
முதியோர் பணம் என் உள்பையில்
மூன்று மலை ஏறியிறங்கி
நம்மவர்க்கான
மார்க்கெட் கடையிலிருந்து
ஒரு கிலோ மாட்டுக்கறி
ரூபாய் இருநூற்றி ஐம்பது
என் மகள்,பேத்தி,குடும்பம்..
ஒன்றாய் உண்ண
வாங்க வேண்டும்.

தார் பாதையில்
கரி பூசும் காற்று..
கைபேசிகளின் ரீங்காரம்..
சோலைகள் எல்லாம் வீடுகள்..
நீரோடைகளில் மனித மலம்..
சங்கீதப்பேருந்துகள்..
வாகனங்களின் பேரிரைச்சலில்
படபடக்கும் மக்கள் மனம்..
நடைமட்டும்.. ஓட்டமில்லை.
கறி என் கைப்பையில்
மெதுவடையை தின்றுவிட்டு
மூச்சுவாங்கும் நடை
கற்பாறை மீது உலர்ந்த எச்சில்..
பேத்தித்தந்தாள் முத்தம்.

*-அருள்சந்*
*19-08-2016 குன்னூர்*







# இறப்பை நேசிக்கிறேன்.

அடர்ந்த கானகம்..
பறவைகளின் ரீங்காரம்..
ச்சோவென அருவி.
நீரோடைகளின் ஜலதரங்கம்..
என் அம்மாவின் ஞாபகம்...
நீந்தக்கற்றதும் குளிரும்போது
நனைந்த உடல் காய்ந்தபடி
அன்னையின் அரவணைப்பில்
பயணித்ததும் மறக்கமுடியுமா?

மயக்கம் இன்னும் தெளிந்தபாடில்லை.
கொஞ்சமாய் நினைவுகள்..
அடர்மரநிழலிருந்து
வெளிவரும் பொழுதிற்காக
காத்திருந்தோம்;
இருப்பது தெரியாமல்
பதுங்கியிருந்தோம்;
என்னைபோல் சிறியவன் அவன்..
கண்ணிமைபொழுதில்
அவன் அடிவயிற்றில்
என் முன்னங்காலால்
புரட்டியெடுத்தேன்..
எண்திசைக்கும் முட்கள் சிதற
ரத்தவெள்ளத்தில் அவன்..
உணவுதேடும் பந்தயத்தில்
ஜெயித்துவிட்டேன்.

வெளிவரமுடியாத கம்பிகளுக்கிடையே
நான் ஏன் இங்கிருக்கிறேன்?
மயக்கம் தெளியவில்லை..
என் தாய் இறந்து
காலம் பல ஓடிவிட்டது.
காட்டிக்கொடுப்பதற்கு பலரிருந்தாலும்
ஓடிப்பாய்ந்து கழுத்தைக்கடித்து
ரத்தம் குடித்து முதுகில் சுமந்து
பலநாள் தின்ற வாலிபப்பருவம்
எப்படி நிலைக்கும்.!

முதுமை கொடியது.
காட்டுப்பாதையில்
கடந்திடும் வழிபோக்குகள்..
ருசிகெட்ட உப்பு ரத்தம்
என் புதிய உணவு.
சுருக்கென்று முள் தைத்த உணர்வு..
மயங்கி விழுந்தது நினைவிற்கு வர
கம்பிகளுக்கிடையில்
ரத்தம் சொட்டும் மாமிசத்துண்டு..
பசி..பசி..ருசி..ருசி..
தீர்ந்தது பசி.இனி...
அம்மாவை போல் நானும்
என் இறப்பை நேசிக்கிறேன்.

*-அருள்சந்.05-10-2016 குன்னூர்.*









# எந்திரன் உலகு இங்கில்லை.



குறிஞ்சி நிலத்து வேடன்...அவன் வீரன்.
கண்கள் அம்புகளாய் மான்மீதும் புலிமீதும் பாயும்.
மலைப்பெண்ணொருத்தி...பேரழகி..கழுகுப்பார்வை...
வீரனை வசப்படுத்த..பாலருவியில் குளித்தாள்..
குறிஞ்சி மலராய் பூத்தாள்.
வீரவேடனவன்..ஹூம்..வசப்படுத்தமுடியாதவனானான்.
மனம் வெறுத்தாள்..பெண்ணாய் பிறந்தது தப்பென நினைத்தாள்.



இனி ஆண்களே இந்நிலத்தில் வாழட்டும்.!
முழுநிலா இரவொன்றில் இருள்மலை சரிவில்
பெருவிருட்ச விழுதொன்றை இருக்கிப் பிடித்து
இன்னுயிர் மாய்க்க ஊஞ்சலாடினாள்..
மென்கரம் காய்ந்து கைப்பிடித்தளர பூங்கொடி வீழ்ந்தாள்...
வேட்டையொன்று தானாய்
விண்மீனென தன்மீது வீழ்ந்ததோ.! கானகத்தில் வேடன்..
சாய்த்தாள் பேரழகி..சரிந்தான் வீர வேடன்...
மயக்கம் தெளிந்தது.. நான்கு விழிகளில் குறிஞ்சிக் காதல்.

-அருள்சந் -11-03-2016







# முழு முதற்தவறு.






என் நாடு..
என் தேசம்..என்மொழி..
தாயென்று முன்பெயரிட்டு
அலங்கரிப்பதேனோ.!

என்மகள்..என்மகன்..
உடலெங்கும் உள்ள
தமனி சிறைகளில்..
சுற்றிப்பாய்ந்திடும்
உயிர் நதி
தன் தாயின்
தொப்புள்கொடி ரத்தமன்றோ.!





பிஞ்சாய் கழிந்த
பால்குடிக்காலம்
ஞாபகச்சில்லில் அழிந்தது
ஓர் இயற்கை நிகழ்வன்றோ.!

பண்பும் பாசமும்
ஊனும் உடையும்
தானாய் பிழைக்கும் வரை
ஊட்டி வளர்த்தவள்
தன் அன்புத்தாயன்றோ.!
பின் பிறப்புச்சான்றில்
தாய்தனை மறந்து
என் பெயர் முன்னெழுத்தானது
முழுமுதற் தவறன்றோ.!

*-அருள்சந்.*
*27-09-2016 குன்னூர்.*
*தமிழக முதல்வர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் தாயின் பெயரை முன்னெழுத்தில் சேர்த்திட 2003-ல் வெளியிட்ட அரசாணை நினைவாக..*







# பசுமை ஜனநாயகம்

குடும்பம்-தனிசொத்து..அரசு.
இது பெரும்சொத்தாக மாறி..
பூவுலகையே அழித்திடும்..
பொருள்சேர்க்கும் வாழ்க்கையாகிவிட்டது.
பெண்ணே
உன் விலங்குதெறிக்கையில்தான்..
மனிதம்
சரிநிகர் சமத்துவமாகும்.
அங்கே..
புவியின் பல்லுயிரிச் சூழலை
மராமத்து செய்திடும்..
ஒன்றை எடுத்தால் மூன்றை நடும்..
பசுமை ஜனநாயகம் மலர்ந்திடவேண்டும்.
அதற்கு..
வாசல் வழியே
உன் கால்சுவடுகள்
வழி நடத்த வேண்டும்
ஒரு நீண்ட பயணம்.!

-ஃப்ரெடிரிக் ஏங்கல்ஸ் -22-05-1884

*-அருள்சந் -09-03-2016*





# சமத்துவம்.


நமக்குக் கீழ் ஒருவரில்லை என்று
உண்மையாய் நினைப்போமானால்
(செயலாக்கம் ஆகும் போழ்து)
நமக்கு மேலாக ஒருவன்
இருக்கவேமாட்டான்.
நம்மை பரிசுத்தமான காற்றை சுவசிக்கும்படி
செய்பவர்களை
கீழானவர்கள் என்று எண்ணிய குற்றத்தின்
கருமபலன்
நமது இரத்தத்தை உறிஞ்சியே ஜீவனம்
செய்பவர்களை
மேலான ஜாதியென்றும்,
அவர்களை சுவாமி என்று கூப்பிட்டு
வணங்கவேண்டியது
நமது மோட்ச சாதனமென்றும்
நினைக்கும்படி செய்துவிட்டது.
இக்குறைகள் நீங்கின நிலைதான்
சமத்துவம்,
சமூக முன்னேற்றமாகும்.

*-தந்தை பெரியார்* குடியரசு-10-01-1926

*-அருள்சந் 07-03-2016*









# அடிமை கொள்வதில் மனுவின் தர்மம்

ரோம பேரரசில்
ஸ்பார்டகஸ் காலத்தில்
யாருக்கு யாவரும்
அடிமை கொள்ள முடியும்.
யூதன் அடிமை..
ஜெர்மனியன், கருப்பன், துருக்கியன்,
ஸ்லாவியன் எல்லோரும் அடிமை..
அடிமை கொள்வதில்
தலைகீழோ மேல்கீழோ
வரன்முறைகள் இருந்ததில்லை.

மனுவின் தர்மம்..
அடிமை கொள்வதில்
தலைகீழ் இல்லை.
எல்லாம் மேலிருந்து கீழ்தான்.

பிராமணனுக்கு..
பிராமணன்,சத்ரியன்,வைசியன்,சூத்திரன்,
ஆதிசூத்திரன்-எல்லோரும் அடிமைகள்.


சத்ரியனுக்கு..சத்ரியன்,வைசியன்,சூத்திரன்,
ஆதிசூத்திரன் ஆகியோர் அடிமைகள்.


வைசியனுக்கு..
வைசியன்,சூத்திரன்,
ஆதிசூத்திரன் மூவர் அடிமை.

சூத்திரனுக்கு..
சூத்திரன்,ஆதிசூத்திரன்
இருவர் அடிமை.


ஆதிசூத்திரனுக்கோ..
அவன் மட்டுமே அடிமை..










மனுவின் தர்மம் கீழிருந்து மேலே..
ஆதிசூத்திரனுக்கு..
பிராமணன்,சத்ரியன்,வைசியன்,சூத்திரன்
எப்பொழுதும் ஆண்டைகளே.

சூத்திரனுக்கு..
பிராமணன்,சத்ரியன்,வைசியன்
எப்பொழுதும் அடிமை இல்லை.

வைசியனுக்கு..
பிராமணன்,சத்ரியன்
அடிமை ஆக மாட்டான்.

சத்ரியனுக்கோ..
பிராமணன் அடிமை இல்லை.

பிராமணன்-
பிரஜாபதியின் வாயில் பிறந்ததால்
பிராமணனுக்கு மட்டுமே அடிமை..

பிராமணன்,சத்ரியன்,
வைசியன்,சூத்திரன்களை
ஆதிசூத்திரன்
அடிமை கொள்வதாய்
மனுவின் வாரிசு
நாரதன் வாய்பாட்டில் இருந்திருந்தால்
இந்துமதத்தில்
அடிமை புரட்சி சம்பவமாகி
வருணபேதம் ஒழிந்து
சமத்துவம் சாத்தியமாகியிருக்கும்.

*-அருள்சந்.20-09-2016 குன்னூர்.*
*-பாபா சாகேப் Dr.அம்பேத்கர்.*
நூல் தொகுப்பு தொகுதி - 6 பக்கம் - 39







# தர்ம சக்கரம்..



எது வேண்டும்..?
பேச்சுரிமை..சங்கம் சேரும் உரிமை...
மத உரிமை..பயமின்றி உயிர் வாழ...
இன்னபிற அடிப்படை உரிமைகள்...
பிழைப்புக்காக ஏதோ ஒரு வேலை...
எது வேண்டும்..?
பிழைப்புதான் வேண்டும்.

தனியார் வேலையில்
திட்டமான சம்பளம் இல்லை.
பணிநேரங்களில் உறுதி இல்லை.
சங்கம் சேர்வதற்கோ உரிமை இல்லை.
மதம் வேற்றாயின் வேலை இல்லை.
எதிர்க்க நினைக்கையில்...
பசி பட்டினி பயம்..வீடிழக்கும் பயம்.
மிச்சம்மீதிகள் என்னாகுமோவென பயம்.
பிள்ளைகள் படிப்பு நின்றிடும் பயம்.
பிச்சை எடுப்போமோ...
செத்தபின் தன் உடல் பொதுச்செலவில்
எரிப்பார்களோ..புதைப்பார்களோ...இவை
தனியார் வேலையில்
பிழைப்பவன் பயம்.

தனியார் சுதந்திரம்...
பொருள், சமூக விவகாரம்..
இம்... இதில் அரசு தலையீடு கூடாது.
யாருக்காக தனியார் சுதந்திரம்..?
நிலப்பிரபு
தன் குத்தகையை உயர்த்தவா.?

முதலாளி தன் லாபத்தை பெருக்க...
நேரத்தைக் கூட்டி
கூலியை குறைக்கவா..?

தனியார் சுற்றிடும் சக்கரம்.
ஒரு பொருளியல் அமைப்பில்
மாபெரும் தொழிற்படை..
மலைபோல் குவியும்...சரக்குகள்.
ஏதோ ஒரு விதியின் கீழ்
தினம் சுழன்றிடும் தொழிற்சக்கரம்..
இது வாழ்வை இயக்கும் சூத்திரம்.
அரசின் தலையீடு இல்லையெனில்
இது தனியார் சுற்றிடும் சக்கரமாகும்.
அரசின் கட்டுப்பாடற்ற
தனிமனித சுதந்திரம்..
அதுவே முதலாளிகளின் சர்வாதிகாரம்.

அரசுச் சுற்றிடும் சக்கரம்.
வேலையில் உள்ளோரும்
வேலை இல்லாமல் உழல்வோரும்
வறுமை,பயம்...விடுதலைப் பெற்று
உயிர்,சுதந்திரம்,வேலை,மகிழ்ச்சி...
இன்னபிற அடிப்படை உரிமைகள்
பறிக்கப்படாமல் காத்து நிற்க
அந்த விதி..அரசின் தலையீடெனில்,,,
நம் வாழ்வை இனிதாக்கும்
தொழிற்சக்கரம்...
அதுவே அரசுச் சுற்றிடும்
தர்ம சக்கரமாகும்.

*அரசு சோசலிசமா..?*
*பொருளியலில்*
*சக்திமிக்கவர் ஆதிக்கம் தடுப்பு;*
*நாடாளுமன்ற ஜனநாயகமா..?*
*அரசியலில் கட்டுப்பாடுகள் குறைப்பு;*
*எது வேண்டும்..?*
*நாடாளுமன்ற ஜனநாயகத்தில்*
*வோட்டுமுறை சட்ட நாடாளுமன்றம் கூட*
*வலியோர்களின் ஆதிக்கம் என்பதால்*
*நலிந்தோர்களின் சுதந்திரத்தை*
*காக்குமென்பதில் சந்தேகமே.*
*ஆக, சர்வாதிகார அரசியலே...*
*அரசு சோசலிசமே மாற்று வழி.*
*ஆனால் சுதந்திரத்தின் நம்பிக்கைகள்*
*சர்வாதிகாரத்தின் எதிர் பண்பு..*
*நாடாளுமன்றமே.!*
*சுதந்திர சமூகத்தின் உயிர்நாடி.*

*ஆக, சர்வாதிகாரமற்ற அரசு சோசலிசம்*
*இந்தியத் தாய்க்கு பிறந்திடுமா..?*
*ஒரு மனிதன்.. ஒரு மதிப்பு...*
*இது யாருடைய ஆன்மா..?*
*ஒரு வோட்டு என்பதோடு*
*நின்று போகவா..?*
*எளிதான பெரும்பாண்மை...*
*ஒருமுறை அரசு சோசலிசத்தை ஆதரிக்கலாம்;*
*மறுமுறை முதலாளிகள் சர்வாதிகாரமாகலாம்;*
*திரும்ப திரும்ப இது நிகழலாம்;எனவே*
*"நிறுத்த.. திருத்த.. அகற்ற.. இயலா*
*அரசியல் அமைப்பு சட்ட வழிமுறைபடி*
*அரசு சோசலிசம் வலியுறுத்தும்*
*நாடாளுமன்ற ஜனநாயகத்தை*
*வைத்துக்கொள்வதே"*
*எனது திட்டமாகும்.*

*நீண்ட கால*
*கடன் பத்திரம் கொடுத்து*
*விவசாயம்..தொழில்..*
*இன்சூரன்ஸ்.. தனை*
*அரசுடைமையாக்கி*
*பெருகிடும் பொருளில்*
*கேந்திர தொழில் வளர்த்து*
*சர்வதிகாரம் தவிர்த்த*
*ஒரு சோசலிச பூங்காவில்*
*மக்கள் மகிவுறும் நாளில்தான்*
*ஜனநாயாகம் நிலைப்பெறும்.*

*-அருள்சந் 25-02-2016*





*அரசியல் நிர்ணய சபைக்கு சமர்பிக்க வேண்டிய கோரிக்கை மனுவை படித்த எனது இந்து நண்பர்கள்,இதை பலரும் படித்து பயனுற வேண்டுமென்பதால் ஒரு பொது அறிக்கையாய் வெளியிட்டேன்.*
*-பாபா சாகேப் Dr.அம்பேத்கர்.*

**15-03-1947 ராஜ்கிருஹா,தாதர்,மும்பை-14**
**நூல் தொகுப்பு தொகுதி-2,பக்கம்-214-217 & 232-238 அறிக்கையில் ஷரத்து-2 பிரிவு-2 கூறு-4 கவிதையாக்கப்பட்டுள்ளது.**

# சங்கர சாதிகள்.

தென்பட்டால்
உன் கைபட்டால் தீட்டு.
கடும் உழைப்பின் வாசமும் தீட்டு.
காலம்தோறும் மனுவின் தர்மம்.
காதலின் மீறல்..
வருணம் நான்கின்
நேர் எதிர் வரிசையில்
பதின் இரண்டு காதல் கலப்பு;
காதல் விளைச்சலின்
நேர் எதிர் வரிசையில்
நூற்றிநாற்பத்தி நான்கு
சங்கர சாதிகள்.

பார்ப்பானுடன் சூத்திரச்சி-
அனுலோமம்..நிஷாதன் சாதி.
சூத்திரன் பாப்பாத்தியோடோ-
பிரதிலோமம்..சண்டாள சாதி.
மனுவின் கொடும் மணவிதி..
மாய்ந்தன அனுலோம பிரதிலோம
சங்கர சாதிகள்.
மடிந்தன தொல்குடியின்
சிறுவீத கலப்புகள்.

தூங்காவனத்தில்
காலச்சுருள் மேல்
புலன்களின் அறிவுத்தவம்..
ஞானக்கீற்று.
வெடித்துசிதறின
தீண்டாமை சுவர்கள்...
தனிக்குவளை,குளம்
எல்லாம் பொதுவெளி.
கண்களில் காதல்;
சொற்களில் காதல்;
வேடனை சாய்த்திடும்
குறிஞ்சிக் காதல்;
எருதினை தழுவிடும்
முல்லைக் காதல்;
கடல் கம்மா இருநிலக் காதல்;
ஆடல் பாடல் அழகின் காதல்;
அனைத்திற்கும் மேல்
கல்வி அறிவொளியில் காதல்.
காதல் தீண்டும்..தீண்டும்...
வருணம் கலக்கும்.. கருக்கும்...
மனுவிதி உலர்ந்து உதிரும்.
மண்மேடாய் மட்கும்..
தீண்டலின் முழுமையில்
மானுடம் மகிழும்.
கௌதம சிரிபில்
பாபா சாகேப் அம்பேத்கர்.

- அருள்சந் 16-02-2016












# அரோகரா என்று நாம் அலகு குத்துவோம்..!




மதுரை மேலூர் மலைகள்
கிரைனட் கற்களாகின...
காற்றும் நீரும் விஷமானதை உடல் உணர்ந்ததால்
மக்களோடு ஐஏஎஸ் சகாயம்...
தோகைமலை,நார்த்தாமலை...தரைமட்டம்...பாதாளம்...
நம்மிடம் பேச்சுமூச்சில்லை.
ஒடிஸாவில் நியாம்கிரி மலையில்
நிலத்தையும் நீரையும் நஞ்சாக்கி,
பூங்காற்றை எரித்து
எல்லா நோய்களையும் தமக்கு ஏற்படுத்திய
பாக்ஸைட் கற்களை கொள்ளையடித்த
வேதாந்தா நிறுவனத்தை
பழங்குடி மக்கள் ஓடஓட விரட்டியடித்தனர்.
ஏற்காட்டிலோ... வேதாந்தா நிறுவனம்
அலுமினிய பாறைகளை வெட்டி கொள்ளையடிப்பதை
தடுப்பேன் என சொல்வதற்கு
Com.தா.பாண்டியனை தவிர யாருமே இங்கில்லை....
இனி பழனி முருகனே
மலையைவிட்டு தரைக்கு வந்தாலும்
அரோகரா என்று நாம் அலகு குத்துவோம்..!
கனிமவள கொள்ளையில்
தரைமட்டமாகும் தாய் தமிழ்நாடு.




*-அருள்சந் -05-05-2016*




# மன வேலி



en மேனி வாசம்
வாடைக்காற்றிலும் பரவும்.
என் விரிந்தக்கண்கள்
இருள் நிழலையும் பார்க்கும்.
என் உரைக்கால்கள்
புதைச்சேற்றிலும் பயணிக்கும்.
என் சாட்டைக்கரங்கள்
அளவிலா செல்வம் சேர்க்கும்.
என் நாசி மொட்டுக்கள்
நறுமலர் வாசம் விரும்பும்.
என் காது மடல்கள்
ஏழு சுரங்களை மயக்கும்.
என் பவள வாய்
அறுசுவை உணவை ருசிபார்க்கும்.
ஆனால்,
என் மனம்..
என் இதயம்.. ஏன்? என் நேசம்...
என்னைத்தான் நேசிக்கும்;
அண்டை அயலாரை வெறுத்தொதுக்கும்.
இருந்தாலும்,
மரணத்திற்கு பின்
உன் பூத உடல்
கோடிப்புழுக்களை நேசிக்கும்.









*-அருள்சந்.*
*19-10-2016.*
*குன்னூர்.*






# வாடாமலர் சரம்.






வண்ண பூக்களை
அதிகாலை வேளையில்
உன் காய்ந்த விரல்களால் தொடுப்பாய்.
உலகெங்கும் பூக்கள் சரங்களாவது
ஒரு சகோதர நிகழ்வன்றோ.!




காலம்தோறும் எண்ணற்ற பூக்களை
உன் கரங்கள் தீண்டின.அதை நீ..உன்
வெள்ளி கேசத்தில் சூடியதில்லையே.!
உன் நிலை உயர்த்தி
பாவம் தொலைந்து ஞாலம் மகிழ்வுற
எண்ணிலா மனபூக்கள் பூத்தனவே.!
புத்தன் - வள்ளலார் - மார்க்ஸ் -
பெரியார் - அம்பேத்கர்..
இன்னும் தொடுத்த
வாடாமலர் சரங்களை
வேற்றுமை கத்திரி
வெட்டித்தொலைக்கின்றனவே.!





சுதந்திரம்-சமத்துவம்-சகோதரத்துவ..
மலர் சரம் தொடுத்திட இன்றும்
உன் விரல்களை தடுப்பது எதுவோ.?
சுதந்திரம்-சமத்துவம்-
சகோதரத்துவம் மறுக்கும்
வேற்றுமை நிறைந்த
மதமெனும் அபின்தானோ.!





*-அருள்சந், 26-10-2016* குன்னூர்.





# பிரம்மரிஷி




என் கடவுளை தவிர
எனக்கு கீழே உள்ளவர்களை அவமதித்திடுவேன்.
மேலேயுள்ள மகிழ்சிமிக்கவரை(சர்மா) வெறுத்திடுவேன்.
என் சாதியை தவிர எதுவும் தெரியாது
என்பதுவே நான் அறிந்துக்கொண்டது.
அதுவும் தெரியும் என்பதும் நிச்சயமற்றது.



என் வருண பெயர் வீரம்.(வர்மா)
என் கீழே உள்ளவன் கொடையாளி.(குப்தா)
நான்காமவன் பெயர் ஊழியன்.(தாசன்)
இதுதான் மனுவின் பெயர் சூட்டு தர்மம்.
தாசன் குப்தா ஆகவோ
குப்தா வர்மா ஆகவோ
நான் சர்மா ஆகவோ முடியவே முடியாது.
சாதிக்குள் அடைத்த சகோரத்துவம்..




விஸ்வாமித்ரன்..காதிக்கு மகனாய் பிறந்தேன்..
அருஞ்சுவை அபூர்வ பசுவிற்கு ஆசைப்பட்டு ஈடாய்
அனைத்தையும் கொடுக்கச்செய்வேன் என்றிறைந்தேன்.
அவமதித்து மறுத்தார் வசிஷ்ட சர்மா.
பசுவிற்காக நான் தொடுத்த யுத்தமனைத்தும் தோல்வி..
மனம் தளரவில்லை.. பிராமண ரிஷியை ஜெயிப்பேன்.!
யுத்தமா.? தவமா.? தவமே ஜெயம்.!




மேனகை ரம்பையின் தவ தடை
என்னை தோற்கடிக்கவில்லை.
முதல் வெற்றி.! ராஜரிஷியாய் உயர்ந்தேன்.
பிரம்மரிஷியாய் ஆகமுடியாதாம்..
தேவர்கள் பிராமணர்கள் தோல்வி ஜுரத்தில் பிதற்றல்..
கடும்தவம்..மூவுலகையும் எரித்திடும்
ஆயிரமாண்டு கடும்தவம்.!
தேவர்கள்-பிராமணர்கள் மிரண்டனர்.
இறுதி வெற்றி எனக்கே.
அவமதித்த வசிஷ்டரின்
மரியாதைக்குரிய பிரம்மரிஷியானேன்.









-அருள்சந்,
29-10-2016
குன்னூர்.



# டி∴ப்ரென்ஸ்.







ஊரெங்கும் வெடிச்சத்தம்..
வழக்கம்போல் தெருநாய்கள்
இடத்தை மாற்றிக்கொண்டன.
இன்னும் இருதினங்களில் தீபாவளி..
ஜீன்ஸில் வந்த என் மகனுக்கு மஷ்ரூம் கட்டிங்..
அழகாய் செதுக்கி வெட்டனும்.
அவன் நண்பனுக்கு டெய்ல் ப்ளஸ் ∴பேஸியல்..
இன்னொருவனுக்கு புஷ்பேக்..
முடிவெட்டுவதில் எத்தனை மெருகு.
இவன் தாத்தா காலத்தில்
பாகவதர்கிராப்-மொட்டை-சம்மர்கட்
அவ்வளவுதான் ஸ்டைல்.
இடைக்காலத்திலோ ஹிப்பி-ஸ்டெப்ஸ்
இளவட்டங்களின் சிகைஅழகாயிற்று.







படிகாரம்,சவரகத்தி,கத்திரி..
ஜெல்கிரீம்,ட்ரையர்,ட்ரிம்மர்..
கால போக்கில் கருவிகளில்
எத்தனை மாற்றம்.! ஆனால் நிலைத்திருப்பதோ
என் அப்பன் காலத்துக்கத்திரி மட்டுமே.
கால் மிதித்து கல்லை சுழற்றி
மழுங்கிப்போன கத்திரிகளை
கூர்பதமாக்கி சாணை பிடிப்பவன்..
தீபாவளி பணத்தோடு
ரூவாய் நூறுப்பெற்றுக்கொண்டான்.
பாண்ட்ஸ் வாசனைக்கிடையே பூக்களின் வாசம்.
நான் வணங்கும் பெரியார் படம்.
என் மகன் என் தொழிலை
வழிவழியாய் செய்யாமல்
படித்து உத்யோகமென்று முன்னேறிவிட்டான்...
மஷ்ரூம் அவனுக்கு எடுப்பாயிருக்கிறது.





வாசலில் பிச்சைக்காரன்..
இன்றைக்கு பணம் தரப்போவதில்லை.
உள்ளே வரச்செய்தேன்.
நேற்று வாங்கிய பேண்ட்,சர்ட்
ஸ்வீட் பாக்கெட் ஷெல்பிலிருந்தது.
சுழல் நாற்காலியில் உட்கார செய்தேன்.
நீண்டு சிக்குபிடித்த தாடி,பரட்டையை
வெட்டிக்கரைத்தேன். இப்பொழுது..
புஷ்பேக் ஸ்டைலில் பிச்சைக்காரன்.!
புத்தாடைகளை பரிசாய் கொடுத்தேன்.!
என் மகன் நண்பர்களுக்கிடையில்
டி∴ப்ரென்ஸ் இன்றி
வணங்கி விடைபெற்றான்.






*-அருள்சந். 11-11-2016. குன்னூர்.*